மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேற்றே இதுபற்றி தெரிந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அவரே நேற்று பேச முடியவில்லை. திடீர் என்று என்னைக் கேள்வி கேட்பதில் என்ன அர்த்தம். நேற்று அவர் பேச முடிந்ததா ? அவர் இளைஞர். அவராலேயே நேற்று இங்கே முடியவில்லையே. இந்தப் பகுதியைக் கலவரப் பகுதி என்று ஒன்றும் அறிவிக்கப்படவில்லை.

(ஆ) முன் அனுமதியின்றி எழுப்பப் பெறும் பிரச்சினை

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்திலே கட்டளை மேட்டு வாய்க்கால், தென்கரை வாய்க்கால் இவைகளில் தண்ணீர் வரவில்லை. தண்ணீர் நிறுத்தப்பட்ட காரணத்தால் 2 இலட்சம் ஏக்கர் காய்ந்து போய்விட்டது. அது சம்பந்தமாக..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஒரு ஒத்திவைப்பு தீர்மானமாக கொண்டு வாருங்கள். எதுவுமே கொடுக்காமல் திடீர் என்று கேட்டால் எப்படி? ஒரே நாளில் அவைகள் காய்ந்து இருக்காது. ரொம்பநாள் தண்ணீர் வராமல் போனதால் தான் காய்ந்து இருக்கும். நீங்கள் ஒத்திவைப்புத் தீர்மானமாக கொண்டு வாருங்கள். எடுத்துக்கொள்ள முயற்சி செய்கிறேன்.

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன் அறிவிப்புகள்

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7-2-1983 அன்று நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். கும்பகோணம் சோமேஸ்வரர் ஆலயத்தில் உண்டியல் உடைக்கப்பட்டு மெய்க்காவலர் கொலை செய்யப்பட்டார் என்பது குறித்து......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ராசமாணிக்கம் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். அதை இன்று எடுத்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் அது வேண்டாம் என்றால் விட்டுவிடுகிறேன். ஒரு நாளைக்கு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் தான் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பார்வையாளர்கள் மாடம் தொடர்ச்சி

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தின் பேரவைத் தலைவர் அவர்களே, பார்வையாளர் காலரி பற்றி பதில் சொல்லிவிட்டீர்கள். நீங்கள் பார்வையாளர் காலரியில் பார்வை